සියලු ම හිමිකම් ඇවිරිණි]
(முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை - 2010 (2012)**

**இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை - 2011 (2012)**

Limited Competitive Examination for Recruitment to Class III of Sri Lanka Administrative Service - 2010 (2012)

Limited Competitive Examination for Recruitment to Class III of Sri Lanka Administrative Service - 2011 (2012)

**(01) பொது நிருவாகம்**
**General Administration**

**மூன்று மணித்தியாலம்**
*Three hours*

- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

**1.** (i) வினைத்திறனுடையதும் விளைத்திறனுடையதுமான அலுவலகமொன்றை நடாத்த மேற்பார்வை உத்தியோகத்தர் ஒருவர் ஆற்ற வேண்டிய முகாமைத்துவப் பணிகள் **நான்கைக்** குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

(ii) முடிவெடுக்கும் போது ஒரு மேற்பார்வை உத்தியோகத்தரினால் பின்பற்ற வேண்டிய **நான்கு** படிமுறைகளைக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

(iii) கிளைத்தலைவர் ஒருவரினால் விடயத்திற்குப் பொறுப்பான முகாமைத்துவ அலுவலரின் வேலையை மேற்பார்வைக்கு உட்படுத்தும்போது மேற்பார்வை செய்ய வேண்டிய **நான்கு** விடயங்களைக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

(iv) பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவருக்குச் சமர்ப்பிப்பதற்காகக் கோப்பொன்றில் குறிப்பெழுதும் போது அக்குறிப்பில் அடங்க வேண்டிய அடிப்படை விடயங்கள் **நான்கைக்** குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

(v) கோப்புக்களை வகைப்படுத்துவதற்காகப் பயன்படுத்தும் **நான்கு** முறைகளைக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

(vi) குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அலுவலர் ஒருவர் குற்றப்பத்திரிகை ஒன்றுக்கு மறுமொழி **அனுப்பாத** போது அது தொடர்பாக ஒழுக்காற்று அதிகாரி எவ்வாறு செயற்பட வேண்டும் ? *(04 புள்ளிகள்)*

(vii) ஒரு அரச அலுவலர் தொடர்பாக ஆரம்ப விசாரணையின்றி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கக்கூடிய **நான்கு** சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

(viii) தாபனக் கோவையின் XXXII ஆம் அத்தியாயத்தின்படி அரசியல் உரிமைகளை அனுபவிக்க **உரிமையில்லாத நான்கு** வகையான அரச அதிகாரிகளைப் பெயரிடுக. *(04 புள்ளிகள்)*

(ix) வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள அரச அலுவலர் ஒருவருக்குச் சம்பளம் எதுவும் செலுத்தக் கூடாத **இரண்டு** சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

(x) ஒரு ஒழுக்காற்று விசாரணை தொடர்பாக ஒழுக்காற்று விசாரணை அதிகாரிக்கு வழங்கப்படும் **நான்கு** பொறுப்புக்களைக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

**2.** (i) அலுவலகமொன்றில் தாபிக்கப்படும் அலுவலக முறைமையொன்றைத் தொடர்ச்சியாகவும் தக்கவாறும் பேணப் பின்பற்ற வேண்டிய **மூன்று** படிமுறைகளைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(ii) நீங்கள் பணியாற்றும் அலுவலகத்தினுள் அலுவலக முறைமையென்றைத் தாபிப்பதன் மூலம் பெறக்கூடிய **ஆறு** பயன்களைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(iii) விடயத்துக்குப் பொறுப்பான முகாமைத்துவ உதவியாளர் கட்டாயமாகத் தம்மிடம் வைத்திருக்க வேண்டிய அடிப்படை எழுத்தாவணங்கள் / பதிவேடுகள் **எட்டைக்** குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

**3.** (i) அரச சேவையில் சேவை மூப்பை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு வழங்கும் பதவி உயர்வுகளினால் ஏற்படக் கூடிய **மூன்று** பிரதிகூலங்களைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(ii) அரச சேவையின் வினைத்திறனையும் விளைத்திறனையும் மேம்படுத்த வினையாற்றுகை மதிப்பீட்டு முறையொன்றின் மூலம் பெறக் கூடிய **ஆறு** பயன்களைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(iii) "வேதன ஏற்றத்தை மாத்திரம் இலக்காகக் கொண்ட வினையாற்றுகை மதிப்பீட்டு முறையொன்றின் மூலம் அம்மதிப்பீட்டு முறையினால் அடைய எதிர்பார்க்கும் நோக்கங்கள் நிறைவேற்றப்பட மாட்டாது" தற்போது அரச சேவையில் நடைமுறையிலுள்ள வினையாற்றுகை மதிப்பீட்டு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் மேற்படி கூற்றை விளக்குக. *(04 புள்ளிகள்)*

[பக். 2 ஐப் பார்க்க

**4** (i) "வேதன ஏற்றம்" தொடர்பாக தாபனக் கோவையில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களை விளக்குக. *(03 புள்ளிகள்)*

(ii) "வேதன ஏற்ற அனுகூலங்கள்" என்பதனால் கருதப்படுபவை யாவை ? *(03 புள்ளிகள்)*

(iii) சம்பள ஏற்றத்தை நிராகரிக்கக் கூடிய **நான்கு** சந்தர்ப்பங்களும் யாவை ? *(04 புள்ளிகள்)*

**5** (i) தாபனக் கோவையின் "பொது நடத்தை" என்பதன் கீழ் அரச அலுவலர் ஒருவரிடம் எதிர்பார்க்கும் **ஆறு** நடத்தைகளைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(ii) அரச ஊழியர் ஒருவரின் "ஒழுங்கற்ற நடத்தை" எனக் கருதப்படக்கூடிய **மூன்று** சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(iii) அரச அலுவலர் ஒருவருக்குக் கடும் தண்டனை வழங்கக் கூடிய முதலாவது உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள **நான்கு** தவறுகள் யாவை ? *(04 புள்ளிகள்)*

**6** (i) அரச அலுவலர் ஒருவருக்குச் சேவைச் சான்றிதழ் ஒன்றை வழங்கும் சந்தர்ப்பத்தின் போது குறித்த சேவைச் சான்றிதழில் உள்ளடக்கக் கூடிய விடயங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(ii) அரச ஊழியர் ஒருவர் பதவியை விட்டுச் சென்ற சந்தர்ப்பத்தில், நியமன அதிகாரியினால் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் யாவை ? *(03 புள்ளிகள்)*

(iii) யாதாயினும் அரச ஊழியர் ஒருவர் தனது பதவியிலிருந்து விலகுவதற்குக் கோரும்போது அது பற்றி கருதும் முன்பாக தீர்த்துக் கொள்ள வேண்டிய **நான்கு** விடயங்களைக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

**7** (i) அரச ஊழியர் ஒருவருக்கு வழங்கப்படும் நியமனக் கடிதமொன்றில் அடங்க வேண்டிய அடிப்படை விடயங்கள் **ஆறைக்** குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(ii) அரச சேவைக்குப் புறம்பான பதவியொன்றுக்குத் தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவரை மீண்டும் அவரது முன்னைய சேவைக்குத் / பதவிக்குத் திரும்ப அழைப்பதற்கு நியமன அதிகாரி எவ்வாறான சந்தர்ப்பங்களில் நடவடிக்கை எடுக்க வேண்டும் ? *(03 புள்ளிகள்)*

(iii) 57 வயதிற்கு பின்னர் சேவை நீடிப்பைப் பெறுவதற்காக அரச ஊழியர் ஒருவர் செய்து கொள்ளும் விண்ணப்பத்தை நிராகரிக்கும்போது நியமன அதிகாரியினால் பின்பற்ற வேண்டிய நடைமுறையை விளக்குக. *(04 புள்ளிகள்)*

***

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை - 2010 (2012)

இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை - 2011 (2012)

Limited Competitive Examination for Recruitment to Class III of Sri Lanka Administrative Service - 2010 (2012)

Limited Competitive Examination for Recruitment to Class III of Sri Lanka Administrative Service - 2011 (2012)

**(02) நிதி ஒழுங்குவிதிகள்**
**Financial Regulations**

மூன்று மணித்தியாலம்
*Three hours*

- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

---

**1.** (i) நி.பி. 393 ன்படி, கொடுப்பனவு நிறுத்தப்பட்ட காசோலை ஒன்றுக்குப் பதிலாகப் புதியதாக காசோலை வழங்கப்படக் கூடிய சந்தர்ப்பங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) நி.பி. 396 ன்படி, வழங்கப்பட்ட அல்லது செல்லுபடியாக்கிய திகதியிலிருந்து 6 மாத காலத்துக்கு மேற்பட்ட காலத்திற்கு காசோலை ஒன்று காசாக மாற்றப்படாதிருப்பின் அது சம்பந்தமாக பெறுநருக்கு அனுப்பிய கடிதத்துக்கு மறுமொழி கிடைக்காவிடின் அதன் பின்னர் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் யாவை ? (03 புள்ளிகள்)

(iii) நி.பி. 115 ன் கீழ் கொடுப்பனவுக்காக அங்கீகாரம் **தேவைப்படாத மூன்று** விதமான கொடுப்பனவுகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iv) வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்குடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் / விவரங்கள் **மூன்று** வகைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(v) செலவினக் கணக்கு மற்றும் மேலதிகக் கணக்கு ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடு யாது ? (02 புள்ளிகள்)

(vi) களஞ்சிய உத்தியோகத்தர் ஒருவரினால் செய்யப்பட வேண்டிய பணிகள் **நான்கைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(vii) வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கினைச் சான்றுப்படுத்தும் உத்தியோகத்தர் யார் ? (01 புள்ளிகள்)

(viii) சான்றுப்படுத்திய ஒதுக்கீட்டு கணக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியவர்கள் யாவர் ? (01 புள்ளிகள்)

(ix) அரசியலமைப்புச் சட்டத்தின்படி கணக்காய்வாளர் நாயகம் தமக்குரிய வேலைகளையும் கடமைகளையும் குறித்த நிதியாண்டினுள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய கால வரையறை எது ? (01 புள்ளிகள்)

**2.** (i) திரட்டு நிதியிலிருந்து காசு செலவழிக்க ஜனாதிபதி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) நி.பி. 102 ன்படி நட்டம்/ சேதம் ஆகியவற்றில் அடங்கக் கூடிய **ஐந்து** உருப்படிகளைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(iii) வருடாந்த கட்டுநிதி விண்ணப்பத்திரத்தில் குறிப்பிடவேண்டிய **ஐந்து** விடயங்களைத் தருக. (05 புள்ளிகள்)

(iv) நி.பி. 108 ல் குறிப்பிட்டபடி அமைச்சின் செயலாளரான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குச் சேதம்/ நட்டம் சம்பந்தமாக செயற்படுவதற்கு அதிகாரமுள்ள சந்தர்ப்பங்கள் **நான்கைக்** குறித்துக் காட்டுக. (04 புள்ளிகள்)

(v) நி.பி. 71 ன் படி திறைசேரிப் பிரதிச்செயலாளரின் பூர்வாங்க அங்கீகாரத்தைப் பெறவேண்டிய **நான்கு** விடயங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

**3.** (i) பொருள் கொள்வனவுச் செய்யும்போது பயன்படுத்தப்படும் **நான்கு** ஆவண வகைகளைப் பெயர் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) பொருள் கொள்வனவுக் குழுவொன்றுக்குப் பொருள் கொள்வனவுச் செய்யும் காரியத்தின்போது நடைமுறைப்படுத்தக்கூடிய அதிகாரங்கள் **நான்கைத்** தருக. (04 புள்ளிகள்)

(iii) பொருள் கொள்வனவுக் காரியத்திற்காக நியமிக்கப்படும் தொழில்நுட்ப மதிப்புக்குழுவின் பிரதான கடமைகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iv) பொருள் கொள்வனவு நடவடிக்கை முடிவில் திணைக்களத் தலைவரினால் பொருள் கொள்வனவு சம்பந்தமாக வெளியிடப்பட வேண்டிய **நான்கு** விடயங்களைத் தருக. (04 புள்ளிகள்)

(v) அரச வருமானத்தை மதிப்பீடு செய்யும்போது அரச வருமான வகையாகக் கருதப்படாதவை **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(vi) திணைக்களமொன்றின் காசு கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக அகக் கணக்காய்வுக் கூறு ஒன்றின் கடமைகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

4 (i) 2014.12.31ல் முடிக்க வேண்டிய கருத்திட்டமொன்றின் தகவல்கள் சில அடங்கும் மொத்தக் கிரய மதிப்பீட்டின் ஒரு பகுதி கீழே காட்டப்பட்டுள்ளது.

('000)

| வருடம் | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| திரண்ட செலவினம் | - | 720 | 1300 | - | - |
| உண்மை செலவினம் | 420 | 300 | 580 | - | - |
| மதிப்பீடு | 500 | 500 | 600 | 600 | 600 |

2012 ஆம் வருடத்தின்போது வருடாந்த மதிப்பீடு செய்யும்போது நி.பி. 20 ன்படி வருடாந்த மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் **ஐந்தை** மேற்காட்டப்பட்ட தகவலின் துணையுடன் காட்டுக.

*(10 புள்ளிகள்)*

(ii) ஒரு கருத்திட்டமொன்றின் மொத்தக்கிரய மதிப்பீடு ரூபா 10 மில்லியனாகும். ஆனால் அந்தக் கருத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு மதிப்பிட்ட தொகையிலும் கூடிய தொகை செலவிட வேண்டியிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் கருத்திட்டத்தின் மொத்தக் கிரயத்தைக் கூட்டிக் காட்டுவதற்கு நி.பி. 72 ன் படி கீழே காட்டப்படுபவர்களிடம் அனுமதியைப் பெற எதிர்பார்க்கப்படும் எல்லைகள் யாவை ?

(அ) திணைக்களத் தலைவர்

(ஆ) அமைச்சின் செயலாளர்

(இ) திறைசேரி செயலாளர் / திறைசேரிப் பிரதிச் செயலாளர்

(ஈ) அமைச்சரவை

*(10 புள்ளிகள்)*

5 (i) கச்சேரிக் கணக்குக் கிளை ஒன்றில் நடாத்திச் செல்ல வேண்டிய பதிவேடுகள்/புத்தகங்கள் **பத்து** வகைகளைக் குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*

(ii) நி.பி. 540 ன் படி கச்சேரி சிறாப்பரின் காசுப்புத்தகத்தில் குறிப்புகளைப் பரீட்சிக்கும் முறைகள் **நான்கைக்** குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(iii) நி.பி. 570 ல் குறிப்பிட்டபடி ஒவ்வொரு வைப்பு வகைகளை காலாவதியான வைப்புக்கள் எனக் கருதும் போது உரிமையை எடுத்துக்காட்ட காரணங்களை முன்வைக்கக் கூடிய கால எல்லைகளைத் தனித்தனியாகக் காட்டுக. *(03 புள்ளிகள்)*

(iv) அதிகாரப் பகிர்வு செய்முறையின்போது வழங்கல் அல்லது சேவைகள் அங்கீகரிக்கும் அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியொருவரினால் கணக்கீட்டு உத்தியோகத்தர் ஒருவருக்கு பொறுப்புக்கூற வேண்டிய **ஐந்து** விடயங்களைக் குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*

(v) "திறைசேரி கட்டுப்பாடும் மேற்பார்வையும்" என்னும் காரியத்தில் அடங்கும் **ஐந்து** விடயங்களைக் குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை - 2010 (2012)**

**இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை - 2011 (2012)**

Limited Competitive Examination for Recruitment to Class III of Sri Lanka Administrative Service - 2010 (2012)

Limited Competitive Examination for Recruitment to Class III of Sri Lanka Administrative Service - 2011 (2012)

**(03) விடய ஆய்வு**
Case Study

*இரண்டு மணித்தியாலம்*
*Two hours*

● கொடுக்கப்பட்டுள்ள சம்பவத்தினை அராய்ந்து அதன்கீழ் கேட்கப்பட்டுள்ள **எல்லாக்** கேள்விகளுக்கும் விடையளிக்குக.

**பூமி அதிர்ச்சி மற்றும் சுனாமி அழிவுகளைத் தணிக்கும் திணைக்களத்தினைத் தாபித்தல்**

கடந்த சனவரி மாதத்தில் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட மிக முக்கிய கொள்கைத் தீர்மானத்தின்படி இந்நாட்டில் பூமியதிர்ச்சி மற்றும் சுனாமி அழிவுகளைத் தணிக்கும் திணைக்களம் தாபிக்கப்பட்டது. 26.12.2004 ம் திகதி நாட்டினைப் பாதித்த சுனாமி அனர்த்தம் காரணமாக, உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் ஏற்பட்ட மிகப்பெரிய அழிவுகளினை இந்நாட்டு மக்கள் இன்னமும் மறக்கவில்லை என்பதோடு, அதன் பின்னரும் அடிக்கடி தொலைவில் சமுத்திரத்திலும் நாட்டிற்குள்ளும் வெவ்வேறு பரிமாணங்களில் ஏற்படும் நில அதிர்வு நிகழ்வுகளினால் மக்கள் பெரும் பீதிக்குள்ளான சந்தர்ப்பங்கள் பல இருந்தன. 2011 ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் உதவித்திட்டத்தின் கீழ் யப்பானிய, அமெரிக்க, பிரித்தானிய நிபுணர்கள் குழு இலங்கைக்கு வந்து ஒரு மாத காலமளவில் நடாத்திய ஆய்வின்போது இலங்கையை அண்மிய பூகர்ப்பம் பூமிஅதிர்வுகளுக்கும் நடுக்கங்களுக்கும் உள்ளாகக் கூடிய பிரதேசமாக மாறி உள்ளதெனக் கண்டறியப்பட்டுள்ளதோடு நாட்டிற்குள் அடிக்கடி சிறிய அளவில் நில நடுக்கம் ஏற்படக் கூடுமெனவும் பாரிய நிலநடுக்கம் பற்றிய அவதானம் முழுமையாகப் புறந்தள்ளக்கூடியதொன்றல்ல என்பதும், விஷேடமாக மத்திய மலைநாட்டின் வட பகுதி பற்றிக் கூடிய அவதானத்துடன் இருக்க வேண்டுமென்பது இனங்காணப்பட்டுள்ளது எனவும் நிபுணர்கள் குழு தமது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தனர். மேலும், இலங்கையில் தென்கிழக்கு சமுத்திரத்தில் பல்வேறு இடங்களில் ஏற்படக்கூடிய பாரியளவிலான பூமியதிர்ச்சி சுனாமி நிலைமையாக உருவாகும்போது இந்நாட்டுக் கடற்கரையோரப் பிரதேசங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என மேலும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக முன் ஆயத்தம் கொள்ள வேண்டிய அவசியமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதோடு எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக விதந்துரைகள் பலவும் அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளன.

புதிதாக தொடங்கப்பட்ட திணைக்களத்துக்குப் பெருமளவு அதிகாரங்கள் கையளிக்கப்பட்டன. இது கால வரையில் வளிமண்டலவியல் திணைக்களத்துக்கும் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கமறுக்கும் பணியகத்துக்கும் ஒதுக்கப்பட்டிருந்த நிலநடுக்கம் மற்றும் சுனாமி நிகழ்வுகளோடு தொடர்புடைய பெருமளவு பொறுப்புக்கள் அந்நிறுவனங்களிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்டு புதிய திணைக்களத்திற்கு ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது. அந்நிறுவனங்கள் இரண்டிலும் நிலநடுக்கம் மற்றும் சுனாமி நிலைமைகள் தொடர்பாக இதுவரை கருமமாற்றிய பிரிவு, நவீன தொழினுட்ப உபகரணங்கள், பயிற்சி பெற்ற பணியாளர் தொகுதி என்பன புதிய திணைக்களத்துக்கு மாற்றப்பட்டன. பலகாலமாக உற்சாகத்துடன் ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த மேற்படி வளங்களும் மற்றும் மிக முக்கிய பொறுப்புகளும், தமது அதிகார வரம்பிலிருந்து விலகிச் சென்றமையிட்டு, அந்நிறுவனங்கள் இரண்டினதும் தலைவர்களும் ஏனைய பணித்தொகுதியினரும் மேற்படி மாற்றம் தொடர்பாக அதிக விருப்பைக் கொண்டிருக்கவில்லை.

புதிய திணைக்களம் புதிதாக அமைக்கப்பட்ட அவசர காலநிலை தொடர்பான அமைச்சின் பொறுப்பின் கீழ் விடப்பட்டது. அதன் அமைச்சர் காலி மாவட்டத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரபலமான பாராளுமன்ற உறுப்பினரென்பதோடு, புதிய திணைக்களத்தின் பிரதான காரியாலயம் 2004ம் ஆண்டில் சுனாமி அனர்த்தத்தின் போது மிகவும் பாதிப்புக்குள்ளான பிரதேசமான தெற்கு மாகாணத்தின் கேந்திர நிலையமாக விளங்கி சேவை வழங்கி வந்த காலி நகரத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. புதிய திணைக்களத்தினை காலி நகரத்தில் அமைப்பது தொடர்பாக ஏனைய அமைச்சர்கள் சிலர் மத்தியில் எதிர்ப்பு இருந்த போதும் இத்தீர்மானத்தில் மாற்றமெதுவும் ஏற்படவில்லை. "அ" வகுப்புத் திணைக்களமாகத் தாபிக்கப்பட்ட பூமி அதிர்வு மற்றும் சுனாமி அழிவுகளைத் தணிக்கும் திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டவர், இதுவரை

[பக். 2 ஐப் பார்க்க

சமூக சேவைத் திணைக்களத்தில் சிரேட்ட பிரதிப்பணிப்பாளராகப் பதவி வகித்த இலங்கை நிர்வாக சேவை முதலாவது வகுப்பு அலுவலர் திரு. பீ. பூபதி ஆவார். சமூக சேவைத் திணைக்களத்தில் கடமையாற்றிய காலத்தில் அவர் இடர் முகாமைத்துவம் தொடர்பாக மூன்று மாதகால தராதரப் பத்திர பாடநெறியினை இந்நிலையில் கற்றுக் கொண்டுள்ளார். திரு. பூபதி அவர்களின் சொந்தப் பிரதேசம் கேகாலை என்பதோடு முன்னர் கொழும்பில் கடமையாற்றும்போது தினசரி கேகாலையிலிருந்து கடமைக்காக வருவது வழக்கமாகும். திரு. பூபதியின் மனைவி அப்பிரதேசத்திலே கடமையாற்றும் பாடசாலை ஆசிரியை என்பதோடு விவாகமாகி பத்து வருடங்களின் பின்னர் பிறந்த ஒரே மகனும் கேகாலை வீட்டில் வசித்து வருகின்றனர். புதிய பதவி தமது தொழிலின் முன்னேற்றத்துக்கு முக்கியமென்பதால் இதனை ஏற்றுக் கொண்ட போதும் அவருக்கு பாரிய பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியிருந்து.

உத்தியோக ரீதியாக மிகக் கடுமையான திரு. பூபதி தமது பணிக்குழுவுடன் அலுவலகக் கடமைகளுக்கு வெளியே தொடர்புகளைப் பேணவில்லை. புதிய திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டுள்ள வளிமண்டலவியல் திணைக்களத்தின் அலுவலர்கள் 40 பேரும் புவிச்சரிதவியல் சுரங்கங்கள் பணியத்தின் அலுவலர்கள் 35 பேரும் சம்பந்தப்பட்ட விடயப்பரப்பில் சிறப்பு அறிவினையும் அனுபவத்தினையும் தொழில்நுட்பத்திறமைகளையும் கொண்டவராவர். அத்துடன் புதிய திணைக்களத்துக்குப் புதிதாக ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்ட அலுவலர்களுடன் சேர்த்து மொத்தமாக 130 பேர் இருந்தனர். அவ்விரண்டு நிறுவனத்திலிருந்தும் வந்த அலுவலர்களில் புவிச்சரிதவியல் மற்றும் குறித்த துறைகளைச் சார்ந்த விடயங்களில் கலாநிதிப் பட்டம் பெற்ற நால்வரும் முதுமாணிப்பட்டத்தினைப் பெற்ற பத்துபேரும் அடங்குவர். காலி நகரத்தில் நிறைவான புதிய கட்டிடமொன்று புதிய திணைக்களம் ஆரம்பிப்பதற்குக் கிடைத்தமையும் தேவையான வாகனங்களும் நவீன தொடர்பாடல் வசதிகளும் அமைச்சரின் தலையீட்டினால் குறைவின்றிக் கிடைத்தமையும் வரப்பிரசாதமாகும்.

இலங்கை நிர்வாக சேவையில் சமகால சகாவான காலி மாவட்ட செயலாளர், திரு பூபதியின் நெருங்கிய நண்பராவார். இது தற்போது பூபதி அவர்கள் தனது பதவியில் பதவி ஏற்று பல மாதங்கள் ஆகியுள்ளன. அலுவலகங்களின் சந்திப்பு, பெரும்பாலும் அலுவலகக் கடமைகளுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதோடு அலுவலர்கள் தமது அறைகளிலிருந்து கோப்புக்களை இங்கும் அங்கும் அனுப்புவதன் மூலமாகக் கருமமாற்றும் நிலைமை காணப்படுகின்றது. புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகத்திலிருந்து வந்த தொகுதியினர் ஒரு குழுவாகவும், வளிமண்டலவியல் திணைக்களத்திலிருந்து வந்தவர்கள் இன்னொரு குழுவாகவும், ஏனைய தொகுதியினர் வேறொரு குழுவாகவும் குழுக்களாகப் பிரிந்திருந்த நிலைமையை மாற்றுவதற்கு புதிய திணைக்களத்தின் நிர்வாகத்திற்குப் பொறுப்பான பணிப்பாளராகிய திரு. ஏ. சுதசிங்க கடந்த காலத்தில் எடுத்த முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை.

புதிய திணைக்களத்தின் குறிக்கோள் தொகுதியினை நிச்சயித்து ஐந்தாண்டு முன் ஆயத்தத் திட்டத்தினைத் தயாரிக்கும் பெரும் அவாவைக் கொண்ட திரு. பூபதி அலுவலர்களின் கூட்டங்கள் பலவற்றை நடாத்தி கவனத்தினை ஈர்த்த போதும் பூமியதிர்ச்சி மற்றும் சுனாமி விடயங்களுக்குப் பொறுப்பாகவுள்ள பணிப்பாளர்களின் பங்களிப்பு, போதியளவு கிடைக்காமையினால் இதுவரை கைகூடவில்லை. தமது அமைச்சுக்கு உரிய காரியாலயமாகையால் அமைச்சரும் அடிக்கடி வருகை தருவதோடு திருப்திகரமான முன்வேலைத்திட்டமொன்றினை இதுவரைத் தயாரித்திருக்காமை தொடர்பாக கவலையினைத் தெரிவித்திருந்தார். நிலநடுக்கம் மற்றும் சுனாமி எச்சரிக்கையுள்ள பிரதேசங்களில் நெருக்கடி நிலைமையினைச் சமாளிப்பதற்குப் பத்துப் பிரதேசக் காரியாலயங்களை அமைக்க அரசு விரும்பிய போதும் அது நிறைவேறாமல் இருப்பதற்கு இந்த "குளிர் யுத்தம்" காரணமாகும்.

கடந்த 2012 வருடம் ஏப்பிரல் மாதம் 10 ம் திகதி தனது மகனுக்குக் கடும் காய்ச்சலும் வலிப்பும் ஏற்பட்டுள்ளதாக திரு. பூபதிக்கு தொலைபேசி அழைப்பொன்று கிடைத்தது. சிங்களப் புதுவருட லீவினைக் கழிக்கும் நோக்குடன் ஒரு கிழமை விடுப்புக்கு அமைச்சின் செயலாளருக்கு விண்ணப்பத்தினை அனுப்பி விட்டு திரு. பூபதி உடனடியாகக் கேகாலைக்குச் சென்றார். மகனின் சுகவீனம் உக்கிரமடைந்ததால் அவரை வைத்தியசாலையில் சேர்க்க நேர்ந்தது. ஏப்பிரல் மாதம் 11 ந் திகதி பிற்பகல் 2.00 மணியளவில் சுமத்திரா தீவுக்கண்மையில் சமுத்திரத்தில் 8.7 றிக்டர் அளவில் பூமியதிர்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் இலங்கையும் சுனாமி முன்னெச்சரிக்கைக்கு உட்பட்டுள்ளதாகவும் தொலைபேசி அழைப்பொன்று வைத்தியசாலையில் தமது மகனுக்கருகில் இருக்கும்போது திரு. பூபதிக்கு கிடைத்தது.

(இந்தச்சம்பவம் ஆய்வின் பொருட்டு கற்பனையாகச் சித்தரிக்கப்பட்டதென்பதோடு அதில் வரும் பெயர், கிராமம், பிரதேசம், நிகழ்வுகள், சம்பவங்கள் என்பனவும் கற்பனை ஆனவையே)

[பக். 3 ஐப் பார்க்க

1. நிலநடுக்கம் மற்றும் சுனாமி அழிவுகளைத் தணிக்கும் திணைக்களம் தாபிக்க அரசாங்கத்தினைத் தூண்டிய காரணிகள் யாவை ? (10 புள்ளிகள்)

2. நிலநடுக்கம் மற்றும் சுனாமி அழிவுகளைத் தணிக்கும் திணைக்களத்திற்கான குறிக்கோள் தொகுதியினைத் தயாரிக்குக. (பிரதான குறிக்கோள்கள் **ஐந்துக்கு** மட்டுப்படுத்தவும்) (10 புள்ளிகள்)

3. 11.04.2012 இல் ஏற்பட்ட நெருக்கடியான சந்தர்ப்பத்தில் திரு. பூபதி அவர்களினால் உடனடியாக எடுக்க வேண்டிய நடைமுறைகள் யாவை ? (10 புள்ளிகள்)

4. பூபதி அவர்களின் தலைமைத்துவப் பாங்கின் பிரதான இயல்புகளை விளக்குக. (10 புள்ளிகள்)

5. புதிய திணைக்களத்தின் பிரதான காரியாலயம் காலியில் அமைக்கப்பட்டதால் ஏற்பட்ட நன்மைகளும் எதிர்கொள்ள வேண்டியிருந்த பிரச்சினைகளும் யாவை ? (20 புள்ளிகள்)

6. (i) நிலநடுக்கம் மற்றும் சுனாமி அழிவுகளைத் தணிக்கும் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் எதிர்நோக்க வேண்டியிருந்த முகாமைத்துவச்சிக்கல்களைப் பகுத்தாய்க. (20 புள்ளிகள்)

   (ii) நிலநடுக்கம் மற்றும் சுனாமி அழிவுகளைத் தணிக்கும் திணைக்களத்தில் நிலவிய திருப்திகரமற்ற நிலைமையினை சீர்செய்வதற்கு எடுக்க வேண்டிய தீர்வுகளை முன்வைக்குக. (20 புள்ளிகள்)

***